பக்கங்கள் 17 + 07

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 28 செவ்வாய்க்கிழமை 13.08.2024 | அதிர்வு 12

## விமல் கட்சி எம்.பியும் ரணிலுக்கு பேராதரவு



தேசிய சுதந்திர முன்னணியின் புத்தளம் மாவட்ட தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜகத் பிரியந்த, 04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# ஜனாதிபதியாக வந்தால் தமிழருக்குத் தீர்வு உறுதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சத்தியம்





"இதுவரை காலமும் நான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக்கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பேன்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 02



### சிந்துஜாவின் மரணத்துக்கு நீதி கோரி

## மன்னாரில் யாழ். வைத்தியர் உண்ணாவிரதப் போராட்டம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த இளம் தாய் ம.சிந்துஜாவின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியர் செந்தூரன் இன்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். 04



## ஜனாதிபதியாக...

தம்மை இன்று செவ்வாய்க்கிழமை சந்தித்த மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடமே அவர் இதனைக் கூறினார் என்று கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட் ஆகிய இரண்டு கட்சிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் அழைப்பையேற்று இன்று அவரைச் சந்தித்தன.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

“ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவின் அழைப்பையேற்று அவரை இன்று காலை 7.30 மணியளவில் எதிர்க்கட்சி அலுலகத்தில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. மற்றும் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோரும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பியும் சந்தித்தனர்.

மற்றைய தரப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பிரதம அமைப்பாளர் உமாசந்திரா பிரகாஷும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு பொது வேட்பாளரைக் களமிறக்கியுள்ள நிலையிலேயே அந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பைத் தனித்தனியாக அரசியல் கட்சிகளுக்கும் பொது அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுக்கும் விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே மேற்குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமான தங்களுடைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவும், சஜித் பிரேமதாஸ, தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்காக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்காகவுமே இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் பிரதானமாக தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வு தொடர்ந்தும் எட்டப்படாமல் இருப்பதனாலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு வலுப்பெற்றது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக் கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை



என்றும், இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பார் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ஆகவே, கடந்த கால கசப்பான நிகழ்வுகளை மனதில் வைத்துக்கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சகல உரிமைகளும் இருக்கின்றன என்றும், அதைத் தான் மதிக்கின்றார் என்றும் தெரிவித்த அவர், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்குத் தான் மதிப்பளிக்கின்றார் என்றும் கூறினார். ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்கள் முன்னிலைப்படுத்துவது ஒற்றுமையைச் சீர்குலைக்கலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

அவரைப் பொறுத்தவரை முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகத் தான் தயாராகவுள்ளேன் என்று தெரிவித்தார். அதற்காகத் தான் வெளிப்படையாகவும் பேசி வருகின்றார் என்றும், யாருக்கும் பயந்து சாக்குப்போக்குகளைச் சொல்வது இல்லை என்றும் தெரிவித்தார்.

இவ்விடயத்தில் தான் உறுதியாக இருக்கின்றார் என்றும், ஜனாதிபதியாக வெற்றி பெறும் பட்சத்தில் உடனடியாக மாகாண சபை அதிகாரப் பகிர்வை முழுமையாகநடைமுறைப்படுத்துகின்றார் என்றும் தெரிவித்தார்

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பைத் தடுப்பது, தமிழ் இளைஞர்கள், யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டன.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இப்படியான பிரச்சினைகளுக்குத் தான் சிறப்புப் பணிக் குழுக்களை அமைத்து தனது நேரடி மேற்பார்வையின் கீழ் பிரச்சனைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

தான் இலங்கையில் உள்ள அனைத்து இனங்களையும் அனைத்து மதங்களையும் நேசிப்பவன் என்றும், தான் ஒரு இனவாதி அல்ல என்பதையும் தமிழ் மக்கள் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும், ஆகவே வரும் ஜனாதிபதித் தேர்தலிலே தனக்கான ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அவருடைய கருத்துக்களைப் பரிசீலித்து மற்றவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் எங்கள் நிலைப்பாட்டை மீண்டும் தெளிவுபடுத்துவதாகத் தமிழர் தரப்பில் தெரிவித்ததுடன் சந்திப்பு முடிவு பெற்றது.” – என்றுள்ளது.



# இளம் தாய் சிந்துஜாவின் சாவுக்கு நீதி கோரி மன்னார் வைத்தியசாலைக்கு முன் போராட்டம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவுக்கு நீதி கோரி இன்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக வருகை தந்த நிலையில், நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்தப்போக்கு காரணமாக உயிரிழந்த சிந்துஜா மரியராஜ்ஜின் மரணம் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்தபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டால் இறந்தவருக்கு நீதி வேண்டும், இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது என வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் சிந்துஜாவின் தாய், சிந்துஜாவுக்குப் பிறந்த குழந்தை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெண்கள் அமைப் பினர், பொது அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

















# நடுக்காட்டில் ஆசிரியர் ஒருவரை இறக்கிவிட்டுச் சென்ற அரச பஸ்

## வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஆசிரியர் ஒருவரை நடுக்காட்டில் இறக்கி விட்டுச் சென்ற பஸ் விடயமாக பாதிக்கப்பட்ட ஆசிரியர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கல்முனை – யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு சாலைக்குச் சொந்தமான பஸ்ஸில் பயணித்த கஷ்டப் பிரதேச பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியருக்கே இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஆசிரியர் கருத்துத் தெரிவிக்கையில்,

“நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு எல்லைக் கிராமப்புற பாடசாலையான ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலயத்திலிருந்து ஓட்டமாவடிக்கு வருவதற்காக மேற்படி இ.போ.ச. பஸ்ஸில் பயணித்த சமயம் இடைநடுவே என்னுடைய பிரயாணப் பை பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்துவிட்டது.

அதை நன்கு அவதானித்த சாரதி பஸ்ஸை நிறுத்தி என்னுடைய பையை எடுத்து வரும் வரையில் காத்து நிற்பதாகச் சொன்னார். நான் அந்தப் பையை எடுக்கச் சென்றதும் யானைகள் நடமாட்டமுள்ள காட்டுக்குள் என்னை தன்னந் தனியே விட்டுச் சென்று விட்டார்.

உயிருக்கு உத்தரவாதமில்லாத அந்த நடுக்காட்டில் கொளுத்தும் வெயிலில் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அச்சத்தோடு காத்திருந்து ஓட்டமாவடி வந்தடையும் துப்பார்க்கிய நிலை எனக்கு ஏற்பட்டது

அதிக பஸ்கள் பயணத்தில் ஈடுபடாத இப்பாதையில் அரச பஸ்களை நம்பி பயணித்து கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்குக் கற்பிக்கச் செல்கின்ற ஆசிரியரான எனக்கே இவ்வாறான நிலையெனில், சாதாரண மக்களின் நிலை என்னவாக இருக்கும்?.

இவ்வாறான மோசமான செயல்களில் ஈடுபடும் ஒரு சில சாரதி, நடத்துநர்களால் ஒட்டுமொத்த அரச நிறுவனத்துக்கும் அவப்பெயர் ஏற்படுவதுடன், அரச பஸ்களை நம்பி பயணிக்கும் அரச ஊழியர்கள், பொதுமக்களுக்கும் அசௌகரியங்கள், நம்பிக்கையீனங்களும் ஏற்படுகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் போக்குவரத்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளேன்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளேன்.” – என்றார்.

# யூசிமாஸ் தேசிய மட்டப் போட்டியில் திருநெல்வேலி நிலையம் சாதனை!

‘யூசிமாஸ்’ மனக் கணித தேசிய மட்டப் போட்டியில் திருநெல்வேலி யூசிமாஸ் மாணவர்கள் அதியுயர் விருதை வென்றனர். அத்துடன், திருநெல்வேலி யூசிமாஸ் நிலையத்திலிருந்து 150 மாணவர்கள் பங்கேற்றதுடன் 80 மாணவர்கள் மெரிட் சித்தியையும் பெறுள்ளனர்.

யூசிமாஸ் தேசிய மட்டப் போட்டி கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் நாடு முழுவதிலிருந்தும் 2 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில், கிராண்ட் சம்பியன் பி பிரிவில் திருவரன் கேஷிகன், ஈ பிரிவில் உதயகுமார் ரிஷ்வின் ஆகியோர் வென்றனர்.

இதேபோன்று, நிலோஜன் அரோன்ஸ், விதுஷியா மதிவதனன், சுதர்சன் ஹரிபிரசாத் பரமேஸ்வரன் அருணேந்திரன், சயந்தன் தரணிகன் ஆகியோர் சம்பியனாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# சமகால அரசியல் கூட்டம்

(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்களுக்கான சமகால அரசியல் தொடர்பான கூட்டம் அட்டாளைச்சேனை ஸக்கி மண்டபத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ. கே. அமீரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்துக்குக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சமகால அரசியல் தொடர்பாக விளக்கமளித்தார்.

அம்பாரை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலிருந்தும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கிஸ்தர்கள், புத்திஜிவிகள், கலவியலாளர்கள், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். அமீர் அலி மாகாண சபை உறுப்பினர்களான ஐ. எல்.எம். மாஹீர், ஜவாத், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான எம்.ஏ. அன்சில், அஸ்ரப் தாஹிர், பிரதித் தவிசாளர் தாஜுதீன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு கட்சியின் முக்கியஸ்தர்களால் பல்வேறு பட்ட கேள்விகள் கேட்கப்பட்டன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மன்னாரில்...

சிந்துஜாவின் மரணத்துடன் தொடர்புடைய அனைவரும் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மன்னாரில் இந்தப் போராட்டத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

### விமல்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை இன்று சந்தித்துப் பேச்சு நடத்திய அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதிக்குத் தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த விபத்தில் உயிரிழந்த பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த ஜகத் பிரியந்த தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ரணிலுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தருக!

## இப்படித் தெரிவித்துள்ளார் முஷாரப் எம்.பி.



(கே. எ. ஹமீட்)

இந்த நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியால் மூழ்கி தத்தளித்த போது நாட்டை மீட்க எவரும் துணிந்து வராமல் இருந்த சந்தர்ப்பத்தில் இன்று இலங்கை தேசம் நிம்மதி பெருமூச்சு விடுவதற்கும் எதிர்காலத்தை சிறந்த முறையில் வித்திடுவதற்கும் திட்டமிட்டவர், வித்திட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்றால் அது மிகையில்லை.

எனவே வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது நன்றியைத் தெரிவிக்க நாட்டு மக்கள் தயாராகி வருகின்ற இந்தச் சூழலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தவித நிபந்தனையும் இன்றி ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாற்றை நோக்குகின்ற போது முஸ்லிம் கட்சிகளதும் அதன் தலைமைகளதும் தூரநோக்கு இல்லாத தீர்மானங்கள் பெரும்பான்மை சமூகத் திடம் முஸ்லிம் விரோதப் போக்கையும் பெரும் அழிவுகளையுமே முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்படுத்தியது என்றால் அது மறுக்க முடியாத உண்மையே.

உலக நாடுகள் பலவற்றில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர். ஆனால் தனியொரு ஆளாக நெஞ்சைக் கொடுத்து நம் தேசத்தின் அவலங்களை சுமந்து இன்று உலக நாடுகள் ஆச்சரியப்படுமளவிற்கு நாட்டு மக்களைக் காப்பாற்றி நிம்மதிப் பெருமூச்சு விட வைத்துள்ளார்.

அது மட்டுமல்ல குறிப்பிட்ட காலத்துக்குள் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்து சாதனையையும் நிலை நாட்டியுள்ளார். அப்படியான ஆளுமை, பொருளாதார நிபுணத்துவம் உள்ள ஒருவரிடமே மீண்டும் நாட்டை நாம் ஒப்படைக்க வேண்டும். இன்று பங்களாதேஷ் நாட்டில் பொருளாதார நிபுணத்துவம் உள்ள நோபல் பரிசு பெற்ற முஹமட் யூனுஸ் அவர்களிடமே நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே இவைகளைக் கருத்தில் கொண்டு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுத்தீன் முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நலனுக்காகவும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும்.– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பதின்ம வயதுப் பாதிப்பு

இலங்கையில் சமூக விழுமியங்கள் மோசமடைந்து வருவது பற்றிய அதிர்ச்சித் தகவலை புள்ளிவிவர வெளியீடு ஒன்று வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகமும் அதனால் பதின்ம வயதுக் கர்ப்பமும் அதிகரித்து வருகின்றன என்பதுதான் அந்தப் புள்ளிவிவரம். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சமீபத்திய அறிக்கைகள் இவ்விடயத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றன.

இந்த ஆண்டில் முதல் பாதியில் மாத்திரம் பதின்ம வயதுக் கர்ப்பம் தொடர்பான 28 வழக்குகள் பதிவாகியுள்ளன எனவும் அவற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. வழக்குகளுக்கு வாராமல் பல மடங்கு உள்ளன எனக் கருதப்படுகின்றது.

அந்த அறிக்கைகளின் படி, இந்தப் பதின்ம வயதுக் கர்ப்பம் பாலியல் துஷ்பிரயோகத்தின் நேரடி விளைவாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பை கண்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு முதல் பாதியில் 28 வழக்குகளும் 2023 ஆம் ஆண்டு அதே காலகட்டத்தில் 18 வழக்குகளும் பதிவாகியுள்ளன. இது 55.5 விகித அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

இதனுடன் இணைந்து, பலாத்காரம் மற்றும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய அறிக்கைகளும் தொடர்ந்து அதிகமாகவே உள்ளன.

2024 ஆம் ஆண்டில் மட்டும், இதுவரை 23 பலாத்கார வழக்குகள் பதிவாகியுள்ளன. 2023 இல் பதிவு செய்யப்பட்ட மொத்த 50 வழக்குகளில் கிட்டத்தட்ட பாதி, இந்த ஆண்டு இப்போதே பதிவாகியுள்ளன. ஆகவே இந்த எண்ணிக்கை இந்த ஆண்டு முடியும் போது வெகுவாக அதிகரிக்கும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கூடுதலாக, 2024 இன் முதல் ஆறு மாதங்களில் 157 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துவது போல, நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது. பதின்ம வயதுக் கர்ப்பம் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளின் அதிகரிப்பு, இந்த குற்றங்களால் விகிதாசாரத்தில் பாதிக்கப்படும் இலங்கை இளம் சமுதாயம், குறிப்பாக சிறுமிகள் பாதிக்கப்படுவதை கோடிட்டுக் காட்டுகிறது எனச் சுட்டப்படுகின்றது.

இலங்கையில் இளம் பருவ காலக் கருவுருதல் 2013 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓரளவு குறைந்து வந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. 15 முதல் 19 வயதுக்கு உட்பட்ட மகளிரில் ஆயிரம் பேரில் 20.25 என்ற விகித அளவில் 2013 இல் இருந்த நிலைமை வருடந்தோறும் வீழ்ச்சி கண்டு 2022 இல் 15.36 வீதமாகக் குறைந்திருந்தது என கடந்த ஜூனில் வெளியான மருத்துவ அறிக்கைகள் தெரிவித்தன.

பதின்ம வயதுக் கர்ப்பம் என்பது 13-19 வயதுக்குட்பட்ட பெண் கருத்தரிக்கப்படுவதைக் குறிக்கிறது. இலங்கையில் இது ஒரு முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. உலகில், தொண்ணூறு வீதமான பதின்ம வயதுக் கர்ப்பம்வளரும்நாடுகளில்ஏற்படுகிறது.

இலங்கையில் பதின்ம வயதுத் தாய்மார்களில் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். சுகாதாரத் துறைகளின் அறிக்கையின்படி, இலங்கையில் வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் பதின்ம வயதுத் தாய்மார்கள் பதிவாகியுள்ளனர். மேலும் அவர்களில் தொண்ணூறு வீதம் பேர் காதல் விவகாரங்கள் காரணமாக கர்ப்பமடைந்துள்ளனர்.

முதிர்ச்சியடையாத சிறுமிகள் எளிதில் ஏமாற்றப்படலாம் என்பதால், பெற்றோர்களும் மற்ற பெரியவர்களும் பதின்ம வயதினரின் காதல் விவகாரங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.



# அரச உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழிப் பயிற்சி நெறி!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு சைகை மொழிப் பயிற்சி நெறியானது மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (13) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியானது மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் பொது நிர்வாக அமைச்சின் நிதி அனுசரணையில் மூன்று மாத காலத்தை உள்ளடக்கியதாக மாவட்டத்தின் 14 பிரதேச பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கான பிரதான வளவாளராக ஒய்வு நிலை பிரதிக் கல்வி பணிப்பாளர் (விசேட கல்வி) அலகு தயாநந்தன் மற்றும் சைகை மொழிப் பயிற்சி வழங்குவதற்காக வாழ்வோசை பாடசாலை அதிபர் திருமதி சி.ஏ. தயாமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரச உத்தியோகத்தர்கள் விசேட தேவைக்கு உரியவர்களுடன் தொடர்பாடலை மேம்படுத்துவதில் சைகை மொழியின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

விசேட தேவையுடையவர்களான செவிப்புலன் அற்ற மற்றும் வாய் பேச முடியாதவர்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்கும் சைகை மொழியின் தேவை உணரப்பட்டு மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.










இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் , திருமதி நவரூபரஞ்சினி முகுத்தன் (காணி), விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவகுமார், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி ச. கோணேஸ்வரன், வை. எம். சி.ஏ. பதில் பொது செயலாளர் எஸ். பற்றிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# உதைபந்தாட்ட சம்பியன் கிண்ணத்தை கஹட்டோவிட்ட அல் பத்ரியா சுவீகரிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மல்வான அல் முபாறக் தேசியக் கல்லூரி பழைய மாணவர்களின் பங்க;ளிப்புடன் ஒழுங்கு செய்திருந்த, கம்பஹா மற்றும் கௌனிய கல்வி வல;யத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சம்பியன்சிப் போட்டியில் கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

எக்ஸ் மொபைல் அனுசரணையில் அல் முபாறக் தேசிய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற மேற்படி சுற்றுப் போட்டியில் திகாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும், உடுகொட அல் அரபா மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்த நிகழ்வுக்கு இலங்கை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும், எக்ஸ் மொபைல் நிறுவன தவிசாளர் முஹம்மட் றிஸாம் கௌரவ அதிதியாகவும், உதவி கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.தௌஸீர் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.










# மாகாண ஆணையாளராக வைத்தியர் நபீல் நியமனம்!

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளராக வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் பதில் கடமையாற்றும் பொருட்டு அண்மையில் நியமிக்கப்பட்டவர் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில், ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பிரதி மாகாண ஆணையாளராகக் கடமையாற்றி வந்த வைத்தியர் எம்.ஏ.நபீல் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்றைய தினம் (13) தனது கடமையை திருகோணமலை சுதேச மருத்துவ திணைக்களத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.


அவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று (12) வழங்கி வைத்தார்.










EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# கல்முனை பிராந்தியத்துக்கு 28 வைத்தியர்கள் நியமனம்

(றியாஸ் ஆதம்,
அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களில் கடமையாற்றும் பொருட்டு புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட வைத்தியர்களில் 28 பேர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமனம் பெற்ற வைத்தியர்களுக்கு உரிய சேவை நிலையங்களுக்கான கடிதங்கள் கையளித்தல் மற்றும் அறிமுக நிகழ்வு என்பன நேற்று திங்கட்கிழமை (12) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றன.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனைக் கிளையின் தலைவருமான டாக்டர் எம்.சீ.எம். மாஹிரின் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகிய ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள், பிராந்திய பிரிவுத் தலைவர்கள் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனை கிளையின் செயலாளர் டாக்டர் எப்.எம்.உவைஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது வைத்திய அத்தியட்சகர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் தத்தமது பிரிவு தொடர்பான விவரங்களையும் பணிமனை மற்றும் வைத்தியசாலைகளில் முன்னெடுக்கப்படும் சேவைகள், செயற்றிட்டங்கள் தொடர்பான விவரங்களையும் வழங்கினர்.

கல்முனை பிராந்தியத்துக்கு இந்த முறை அதிமான வைத்தியர்கள் நியமிக்கப்பட்டதை அடுத்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேலதிகமாகவும் இரண்டு வைத்தியர்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# சமூக நலனை முன்னிறுத்தியே மக்கள் காங்கிரஸ் முடிவெடுக்கும்

## மக்கள் சந்திப்பில் தலைவர் ரிஷாத் உறுதி



சமூகங்களின் நலனை முன்னிறுத்தியே அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொருத்தமான முடிவொன்றை மேற்கொள்ளும் என்று மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்? என்பது தொடர்பில், கடந்த 10,11,12ஆகிய தினங்களில் வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற, மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் கலந்துரையாடல்களின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தலைமையுடன் நட்பையும் உறவுகளையும் கொண்டிருப்பதைக் காரணமாக வைத்து எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளருக்கும் ஆதரவு வழங்க முடியாது. சுமார் நான்கரை வருடகால ஆட்சியில் நமது சமூகம் எதிர்கொண்ட இன்னல்களை நாம் மறந்துவிட முடியாது. அதேபோன்று, எதிர்க்கட்சியில் நாம் இருந்தவேளை, கட்சியின் ஆதரவாளர்களுக்கும் தலைமைக்கும் ஏற்படுத்திய துன்பங்கள் மறக்க முடியாதவை.

கொழும்பில் தலைமையும் கட்சியும் முடிவெடுத்த பின்னர், மக்களிடம் வந்து 'இந்த வேட்பாளரைத்தான் ஆதரியுங்கள்' என்று நாம் கூறவில்லை. இதற்கு மாற்றமாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர், ஆலோசனையின் அடிப்படையில் நாம் முடிவுகளை மேற்கொள்வோம். இனங்களுக்கு இடையிலான நல்லுறவுக்கு எந்த வேட்பாளர் வித்திடுகின்றாரோ, அவரை நாம் தெரிவு செய்ய உழைப்போம்.

இனவாதத்தைத் தூண்டி அதில் குளிர்காய நினைப்போரை அடக்குவதற்கான முறையான சட்டங்களை உருவாக்கும் ஆட்சியாளரையே நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். இதுவொரு இக்கட்டான சூழலாகவும் வித்தியாசமான தேர்தலாகவும் இருப்பதனால், நாம் தீர்க்கமான முடிவை மேற்கொள்வதே பொருத்தமானது.

நாட்டின் பொருளாதாரத்தை சீரிய முறையில் முன்கொண்டு செல்பவராகவும் கைத்தொழில் மேம்பாட்டில் அக்கறைகொண்டவராகவும் நாட்டின் எதிர்காலத் தலைவர் இருக்க வேண்டும்.

அத்துடன், முறையான வெளிநாட்டுக் கொள்கையை அவர் பின்பற்ற வேண்டும். பலஸ்தீனத்தை சுதந்திர நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்ற கோட்பாட்டையும் எதிர்காலத் தலைமை மேற்கொள்ள வேண்டும். இவற்றைதான் நமது கட்சி முன்வைக்கிறது.

அதுமட்டுமின்றி வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளை தொடர்ந்தும் இழுத்தடித்துக் கொண்டிராமல், இதனை முடிவுக்குக் கொண்டுவரும் ஒருவரை நாம் அடையாளப்படுத்துவது இந்த சந்தர்ப்பத்தில் பொருத்தமானது. இறைவன் மீது நம்பிக்கைகொண்டு, நாம் பொருத்தமான முடிவொன்றை எடுப்போம்.- என அவர் உறுதியளித்தார்.

வவுனியா, மன்னார், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடல்களில், மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் ஊர்ப்பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.







# மழையில் நனைந்த சிறுபோக நெல்; உலர விடுவதில் விவசாயிகள் சிரமம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்த திடீர் மழையால் சிறுபோகத்தில் அறுவடை செய்த நெல்லை உலர்த்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

தாம் அறுவடை செய்த நெல் மழையில் நனைந்து ஈரமான நிலையில் அவற்றை கல்முனை - அக்கரைப் பற்று, கல்முனை - அம்பாறை பிரதான வீதி ஓரங்களை வெய்யிலில் உலர்த்துவதற்காக விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர்.

பெரும்போகத்தின் போது ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு பரவலாக சிறு போகத்தில் சிறந்த விளைச்சல் கிடைந்திருந்த போதிலும், இதுவரை நெல்சந்தைப்படுத்தும் சபையால் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்யாதபடியால் அரிசி ஆலைகளுக்கே வழங்கி வருகின்றனர். இதனால் பாரிய நஷ்டத்தை விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஈரமான நெல்லை மிகக்குறைந்த விலைக்கு அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்வதால் உலர வைக்கும் நடவடிகைக்களில் விவசாயிகள் ஈடுபட்ட போதிலும் இதற்காக மேலதிக பணத்தை செலவிட வேண்டியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.



# தேசிய விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி; தெரிவாகிய மாணவனுக்குப் பாராட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட 6 ஆம் தர மாணவன் வை.எம். ஹிக்காமை கௌரவிக்கும் நிகழ்வு மாவடிப்பள்ளி அல் அஸ்றப் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். றஜாப்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி பணிமனையின் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச் றியாஸா, காரைதீவு கோட்டக் கல்விப் பணிமனையின் பணிப்பாளரும் கணிதப் பாட பிரதி கல்வி பணிப்பாளருமான ஏ .சஞ்சீவன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவன் வை.எம்.ஹக்கீமின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.





# தேசிய மனக் கணிதப் போட்டியில் ஒலுவிலில் ஐந்து பேருக்கு வெற்றி








**(எம். எப். நவாஸ்)**

யுசிமாஸ் தேசிய மனக் கணிதப் போட்டி நிகழ்வானது அண்மையில் (10) சுகததாச உள்ளக அரங்கில் இடம பெற்றது.

இந்தப் போட்டிக்கு நாடு முழுவதும் இருந்து 3000 போட்டியாளர்கள் பங்கு பற்றினர். இந்தப் போட்டியில் ஒலுவில் சார்பாக பங்குபற்றிய 07 மாணவர்கள் வில் 05 மாணவர்கள் வெற்றி வாகை சூடிக் கொண்டனர்.

இதில் ஒலுவில் மற்றும் அக்கறைப் பற்று நிலைய மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டிக்கு பிராந்திய முகாமையாளர் என் ஜீ.நுபைல் அகமட் மற்றும் பயிற்றுவிப்பாளர் ரீ எம்.பவாஸ் ஆகியோர் மாணவர்களை நெறிப் படுத்தினர்.

மேலும் டிசெம்பர் மாதம் இந்தியா வில் நடைபெற இருக்கும் சர்வதேச போட்டிக்கான தயார்படுத்தல்கள் இடம் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக் கது.

# பதவி விலகும் பாலஸ்தீன தூதரை சந்தித்துக் கலந்துரையாடிய ஜீவன்!




**(பொகவந்தலாவ சதீஷ் )**

பதவி விலகும் பாலஸ்தீன தூதரை அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்தித் துக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நேற்று (12) திங்கட்கிழமை, அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாலஸ்தீன தூதுவர் டாக்டர். ஸுஹைர். எம். எச். சஹிட்டுடன் நேற்று சந்திப் பொன்றை ஏற்பாடு செய்து இருந்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான கலந்துக்கொண்டு பாலஸ்தீன மக்க ளுக்கு தனது ஆதரவை மீண்டும் உறு திப்படுத்தினார்.

இரு நாடுகளையும் பிணைக்கும் வலுவான வரலாற்று மற்றும் கலாச்சார உறவுகளை வலியுறுத்தினார்.

அத்தோடு பாலஸ்தீன மக்கள் மீதான அமைச்சரின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவுக்கு தனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கும் வகையில், டாக்டர். சஹிட், அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்குப் பாலஸ்தீன கெஃபியை பரிசாக வழங்கினார்.

பாலஸ்தீன மக்கள் பாரிய இன்னல் களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளான இக்காலத்தில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் உட்பட சாதாரண இலங்கையர்கள் எவ்வாறு பாலஸ்தீன மக்களின் நலனுக்காகப் பங்களிக்க முன்வந்துள்ளனர் என்பதைத் தூ துவர் இதய பூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இலங்கையில் தனது ஒரு தசாப்த கால இராஜதந்திர சேவையில் இலங்கை மக்களுடன் அவர் கட்டியெழுப்பிய வலு வான தொடர்புகள் மற்றும் பிணைப்புகள் காரணமாக, இலங்கையை விட்டு வெளி யேறுவதில் அவர் எதிர்கொண்ட சவால் கள் மற்றும் சிரமங்களை பாலஸ்தீன தூதுவர் எடுத்துரைத்தார்.

பாலஸ்தீன பிரச்சினைக்கு இலங்கை மக்கள் அளித்த ஆதரவுக்கும் ஒற்றுமைக் கும் தூதுவர் பாராட்டு தெரிவித்தார். அவர் தனது நம்பிக்கையை வெளிப்படுத்திய துடன், ஐக்கிய மக்களாக ஒன்றிணைந்து செயற்படுமாறு இலங்கையர்களை வலியுறுத்தினார்.

பாலஸ்தீன மக்களுக்கும் இலங்கைக் கும் இடையிலான உறவுகளை வலுப் படுத்துவதற்காக ஒரு தசாப்தத்திற்கும் மேலாக தூதுவர் ஆற்றிய அளப்பரிய சேவைக்கு அமைச்சர் ஜீவன் தொண்ட மான் நன்றி தெரிவித்தார்.

பாலஸ்தீனத்துக்கான உலகளாவிய ஆதரவு இறுதியில் பிராந்தியத்தில் அமைதியை உருவாக்கும் என்ற நம் பிக்கையையும் அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.



### இந்தியாவின் கல்வி மையமாக தமிழகம்

# ஜொலிக்கிறது!

## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

"நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முன்னணியில் உள்ள திராவிட மொடலுக்கு இது பெருமையான தருணம்" என தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி நிறுவனங்களின் இந்த ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வி அமைச்சகம் நேற்று வெளியிட்டது. அந்தப் பட்டியலில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடத்தைப் பிடித்துள்ளது. சென்னை ஐ.ஐ.டி, ஒட்டுமொத்த பிரிவில் இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இந்நிலையில், கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலைச் சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர்,

"இந்தியாவின் கல்வி மையமாகத் தமிழகம் தொடர்ந்து ஜொலிக்கிறது. என்.ஐ.ஆர்.எவ். தரவரிசையில் ஏனைய மாநிலங்களை விட தமிழ்நாடு மிகவும் முன்னணியில் உள்ளது. நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முன்னணியில் உள்ள திராவிட மொடலுக்கு இது பெருமையான தருணம். 'நான் முதல்வன்', 'புதுமைப்பெண்', 'தமிழ்ப் புதல்வன்' போன்ற முதன்மைத் திட்டங்களால், நமது மாணவர்கள் உயர்கல்வியில் புதிய உச்சங்களைத் தொடுவார்கள்." – எனத் தெரிவித்துள்ளார்.



### சமூக ஊடகத் தணிக்கைக்கு எதிர்ப்பு; மத்திய அரசு கொண்டு வந்த மசோதா

# வாபஸ்!

சமூக ஊடகங்களில் இயங்கி வரும் வரும் சுயாதீன ஒலிபரப்பாளர்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர் அவற்றைத் தணிக்கை செய்து சான்றளிக்க மத்திய அரசு பரிந்துரைத்தமை, எழுத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை நசுக்கும் வகையில் உள்ளது எனப் பல தரப்பில் இருந்தும் கண்டங்கள் குவிந்துள்ளன.

சமூக ஊடகங்களில் இயங்கி வரும் வரும் சுயாதீன ஒலிபரப்பாளர்களின் வரம்புகளை நிர்ணயிக்கும் வகையில் அவர்களை, ஓ.டி.டி. மற்றும் டிஜிட்டல் செய்தி ஊடகங்களின் நெறிமுறைக்குள் கொண்டுவரவும், அவர்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு முன் அதைத் தணிக்கை செய்து சான்றளிக்கும் குழுவை அமைக்கும் வகையிலும் மத்திய அரசானது புதிய ஒலிபரப்பு சேவைகள் மசோதாவைக் கொண்டுவந்தது.

கடந்த வருடம் நம்பர் 10ஆம் திகதி பொதுவெளியில் இந்த மசோதாவை வெளியிட்டது. பொதுமக்கள் இந்த மசோதா மீதான கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று அரசு கூறியிருந்தது.

அதன்படி, இந்த மசோதா எழுத்து மற்றும் பேச்சுச் சுதந்திரத்தை நசுக்கும் வகையில் உள்ளது எனப் பல தரப்பில் இருந்தும் கண்டனங்கள் குவிந்தன.

இதையடுத்து, தற்போது இந்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது. இதற்குப்பதிலாக சம்பந்தப்பட்டவர்களிடம் ஆலோசனை செய்து புதிய வரைவு மசோதா தாயரிக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.



# இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தத் தயாராகும் ஈரான்

## அமெரிக்கா - மேற்கு நாடுகள் ஈரானுக்கு எச்சரிக்கை

### மீறி தாக்குதல் நடத்தினால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்

## பதிலடி கொடுப்பது எமது உரிமை

### ஈரான் அதிபர் மசூத் உறுதிபடத் தெரிவிப்பு

"இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினால் ஈரான் பயங்கரமான எதிர்விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும்" என ஈரான் அதிபருக்கு மேற்கு நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஈரானில் வைத்து ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்ட சம்பவம் இஸ்ரேலுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையில் போர் மூளும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு, ஏமன் நாட்டில் இயங்கி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் என இஸ்ரேலின் பாலஸ்தீன தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்து வருகின்றனர்.


இந்நிலையில் ஈரானின் புதிய அதிபராகத் தேர்வான சீர்திருத்தக் கட்சியைச் சேர்ந்த மசூத் பெசஸ்க்கியானின் பதவியேற்பு நிகழ்ச்சிக்காக ஈரான் சென்றிருந்த இஸ்மாயில் ஹனியே, அவரது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டார். இதற்கு இஸ்ரேல்தான் காரணம் என்று ஈரான் குற்றம்சாட்டியது.

இதனால் இஸ்ரேல் மீது ஈரான் எந்த நேரமும் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தெரிகிறது. நேரடித் தாக்குதலுக்கு அதிபர் மசூத் மற்றும் ஈரான் புரட்சிகர படையினர் இடையில் கருத்து வேறுபாடு இருந்தாலும், இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுப்பதில் ஈரான் உறுதியாக உள்ளது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த வாரத்தில் ஈரான், இஸ்ரேல் மீதான தாக்குதலை முன்னெடுக்கும் என்று அமெரிக்க வெள்ளை மாளிகை எச்சரித்துள்ளது. எனவே இஸ்ரேலை பாதுகாக்க நீர்மூழ்கிகளையும், ஏர்கிராப்ட்களையும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேலும் அமெரிக்காவுடன் பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, பிரிட்டன் ஆகிய மேற்கு நாடுகள் இணைந்து ஈரானை எச்சரித்துள்ளன. இஸ்ரேல் மீதான இராணுவ நடவடிக்கை, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும், பிராந்தியங்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் இந்நாடுகளின் தலைவர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டும், தனிப்பட்ட முறையில் தொடர்புகொண்டு பேசியும் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் எங்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது எங்களின் உரிமை என்று ஈரான் அதிபர் மசூத் பேசஸ்கியான் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.






## ரஷ்யா, சீனா, வடகொரிய அன்பு வித்தியாசமானது
## ஜோ பைடன் 'சதி'யால் வெளியேற்றப்பட்டார்
## கமலா ஹாரிஸ் வந்தால் மேலும் மோசமாகும்

### 'எக்ஸ்' தள உரிமையாளருடனான நேர்காணலில்

# ட்ரம்ப் சாடல்!

அமெரிக்க முன்னாள் அதிபர் மற்றும் குடியரசு கட்சியின் அதிபர் வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப்பை நேர்காணல் செய்துள்ளார் எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க்.

அதில், அமெரிக்க அதிபர் தேர்தலில் இருந்து பைடன் விலகியமை, கமலா ஹாரிஸ் அதிபரானால் அமெரிக்காவின் எதிர்காலம் என்னவாகும், கால நிலை மாற்றம், வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் எனப் பல்வேறு விடயங்கள் குறித்தும் டொனால்ட் ட்ரம்ப் பேசியுள்ளார்.

உலகம் முழுவதும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த நேர்காணல் இலங்கை - இந்திய நேரப்படி இன்று காலை 5 மணியளவில் நடைபெறவிருந்தது. ஆனால் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த நேர்காணல் 40 நிமிடங்கள் தாமதமாகவே தொடங்கியது.

அந்த நேர்காணலில் இருந்து சில...

**'ஜோ பைடன் வெளியேறியமை ஒரு சதி'**

பைடனுடன் நான் மேற்கொண்ட முதல் நேரடி விவாதத்தில் அவரை நான் மிக மோசமாக தோற்கடித்தேன். அதுவே அவர் அதிபர் தேர்தல் போட்டியிலிருந்து வெளியேற நிர்பந்தித்தது. அதையும் தாண்டி அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து ஜோ பைடன் வெளியேறியமை ஒரு சதி. சொல்லப்போனால் அவர்கள் அவரை மிரட்டிப் பணியவைத்துள்ளனர்.

**'கடவுள் நம்பிக்கை இல்லாதோர் அதை பரிசீலிக்கலாம்..'**

அன்று துப்பாக்கிச் சூடு நடந்த அத்தருணத்தில் என் காதுகளில் புல்லட் துளைத்தது என்பதை நான் உடனே உறுதிப்படுத்திக் கொண்டேன். நான் மட்டும் என் தலையை சாய்க்காமல் இருந்திருந்தால் அது என் தலையில் பாய்ந்திருக்கும் என்பதையும் உணர்ந்தேன்.

அந்த நொடியில் நான் அச்சம் கொண்டேன். இருப்பினும் நான் திடமாக இருப்பதாகக் காட்டவே எழுந்து நின்றேன். அந்தத் தருணத்தில் நான் இறைவன் இருப்பதை உணர்ந்தேன். கடவுள் மறுப்பாளர்கள் கடவுளின் இருப்பைப் பற்றி பரிசீலிக்கலாம். நான் இப்போது கடவுளை நம்புகிறேன். மிகவும் அதிகமாக நம்புகிறேன்.

**பைடன் அதிபராக இருந்தமையால்தான் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்**

உக்ரைன் போர் பற்றி பேசிய ட்ரம்ப், அமெரிக்க அதிபராக பைடன் இருப்பதால் மட்டுமே உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியது. நான் அதிபராக இருந்தபோதும் ரஷ்ய அதிபர் புதினுக்கு உக்ரைன் மீதொரு கண் இருந்தது. ஆனால், நான் தொடர்ந்து போர் வேண்டாம் என்று கூறி வந்தேன்.

இப்போது ரஷ்யா, சீனா, வட கொரியா அதிபர்கள் அவர்களின் விளையாட்டில் உச்சம் கண்டு கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு அவர்கள் நாட்டின் மீது அதீத அன்பு இருக்கிறது. ஆனால், அந்த அன்பு வித்தியாசமானது. இந்தச் சூழலில் அமெரிக்காவுக்கு ஒரு ஸ்திரமான அதிபர் தேவை. அத்தகைய நபரால் மட்டுமே ரஷ்யா, சீனா, வட கொரியாவை சமாளிக்க முடியும்.

**கமலா ஹாரிஸ் அதிபரானால் நிலைமை மேலும் மோசமாகிவிடும்**

அமெரிக்காவுக்கு சரியான அதிபர் இல்லை. ஜோ பைடன் நிர்வாகம் மோசமாக இருக்கிறது. அவருக்குப் பின் கமலா ஹாரிஸ் அதிபரானால் நிலைமை இன்னும் மோசமாகும். கமலா ஹாரிஸ் அமெரிக்காவை அழித்துவிடுவார். அவருடைய பொருளாதார சிந்தனைகள் நாட்டுக்கு கேடு விளைவிக்கும்.

ஏற்கெனவே பணவீக்கத்தால் அமெரிக்க பொருளாதாரம் பெரும் பாரத்தை சந்தித்துள்ளது. அமெரிக்கர்கள் மத்தியில் சேமிப்புக் குறைந்துவிட்டது. மேலும் அமெரிக்கர்கள் கடன் வாங்கி செலவழிக்க ஆரம்பித்துவிட்டனர். கமலா ஹாரிஸ் அதிபரானால் இது மேலும் மோசமாகும்.

அதுமட்டுமல்லாது அவர் சட்டவிரோத ஊடுருவல்களை ஆதரிக்கிறார். அவருடைய இந்தக் கொள்கை உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல். ஏற்கெனவே அவர்களால் அமெரிக்காவுக்கு அளவுக்கு அதிகமான பிரச்சினை உள்ளது.

– இவ்வாறு ட்ரம்ப் பேசியுள்ளார்.

பக்கங்கள் - 7

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 13/08/2024

## குரோத உணர்வில் ரயில் பயணிகளை தாக்கிய இரு பதின்ம வயதுச் சிறுமிகள்

கனடாவின் ரொறன்ரோவில் குரோத உணர்வின் அடிப்படையில் ரயில் பயணிகள் மீது இரண்டு சிறுமியர் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்ப C2



# கனடிய மனித உரிமைகள் ஆணையகத்தின் புதிய தலைவர் பதவியேற்க முன்பே விலகல்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 13**

**கனடிய மனித உரிமைகள் ஆணையகத்தின் புதிய தலைமை ஆணையாளர் பிர்ஜு டட்டானி பதவி விலகியுள்ளார்.**

**இஸ்ரேல் குறித்து அவரது கருத்துக்கள் மீதான விசாரணையின் பின்னர் பிர்ஜு டட்டானி பதவி விலகியுள்ளார்.**

**இஸ்ரேல் தொடர்பில் கடந்த காலங்களில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான விசாரணையின் பின்னர் பதவி விலக அவர் ஒப்புக்கொண்டார் என பிர்ஜு டட்டானி தெரிவித்துள்ளார்.**

இவரது கடந்த கால நடவடிக்கைகள் குறித்து கனடிய யூத அமைப்புகள் கவலை தெரிவித்தமையை அடுத்து நீதி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்தது.

இந்த நிலையில் தனது கடமையை ஆரம்பிக்க முன்னரே பதவி விலக அவர் முடிவு செய்துள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிரான கருத்துக்களை அவர் தெரிவித்திருந்தார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை பிர்ஜு டட்டானி முன்னர் மறுத்திருந்தார்.

# திருடப்பட்ட காரில் மோதுண்டு பொலிஸ் அதிகாரி ஒருவர் காயம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 13

திருடப்பட்ட வாகனத்தால் மோதப்பட்ட டொரன்டோ பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார்.

திருடப்பட்ட வாகனம் குறித்த விசாரணையின் போது ஓகஸ்ட் 11ஆம் திகதி இந்தச் சம்பவம் நோர்த் யோர்க் நகரில் நிகழ்ந்தது.

திருடப்பட்ட வாகனத்தின் சாரதி டொரன்டோ பொலிஸ் வாகனத்தின் மீது மோதியுள்ளார்.

இதில் காயமடைந்த ஒரு அதிகாரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதில் பொலிஸ் வாகனம் ஒன்று சேதமடைந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் 21 வயது




இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள போதிலும், அவரது பெயர் விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.

இரண்டாவது சந்தேக நபர் தொடர்ந்தும் தேடப்படுகிறார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் எந்தத் தகவல்களும் வெளியிடப்படவில்லை.




# ஒலிம்பிக் வீரர்களுக்கு கனடாவில் வரவேற்பு!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 13

கனடாவின் ஒலிம்பிக் அணியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள், சாதனை படைத்த கோடைக்கால ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளை நிறைவு செய்து நேற்று கனடா திரும்பினர்.

இதன்போது அவர்களுக்கு டொராண்டோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் ரசிகர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களால் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரும்பிய குழுவில் டொராண்டோ நீச்சல் வீரர் சம்மர் மெக்கின்டேஷ் இருந்தார், அவர் மூன்று தங்கம் உட்பட நான்கு பதக்கங்களை கைப்பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் கனேடிய கொடியை ஏந்தியிருந்த சம்மட்டி எறிதல் வீரர் ஈதன் காட்ஸ்பெர்க்குடன் நாடு திரும்பியுள்ளார்.

ஆல்டாவில் உள்ள ஸ்ட்ராத்மோரைச் சேர்ந்த வெள்ளிப் பதக்கம் வென்ற ரோவர் ஜெசிகா செவிக், நியூ லிஸ்கேர்டின், ஒன்ட்டின் அணி வீரர் கிறிஸ்டன் சியர்மஸ்கியுடன் கனடாவுக்குத் திரும்பினார்.

பரிஸ் விளையாட்டுப் போட்டிகளில் கனடா ஒன்பது தங்கப் பதக்கங்கள் உட்பட மொத்தம் 27 தங்கப் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் போன ரியல் எஸ்டேட் முகவர்; கொலை துப்பறியும் பிரிவினர் விசாரணை

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 13

சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் மார்க்கம் ரியல் எஸ்டேட் முகவர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொலை துப்பறியும் நபர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

டொராண்டோ பகுதியில் உள்ள ரியல் எஸ்டேட் முகவரான யுக்-யிங் அனிதா முய், ஓகஸ்ட் 9ஆம் திகதி காணாமல் போனார் என யோர்க் பிராந்திய பொலிஸாரினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.






முய்யின் குடும்பத்தினர், ஓகஸ்ட் 9ஆம் திகதி காலை சுமார் 9:30 மணியளவில் பேக்லிஃப் ரோடு மற்றும் வார்டன் அவென்யூ பகுதியில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறியபோது அவளை கடைசியாகப் பார்த்தனர் எனக் கூறியுள்ளனர்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவர்கள் முய்யுடன் மீண்டும் பேசியுள்ளனர்.

ஆனால் அதன் பிறகு முய்யைப் பார்க்கவோ கேட்கவோ இல்லை என்று பொலிஸாரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த நாளின் பிற்பகுதியில், டொராண்டோவில் உள்ள ஃபிஞ்ச் மற்றும் வார்டன் அவென்யூஸ் பகுதியில் முய்யின் வாகனம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## குரோத உணர்வில்...

வம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

றொறன்ரோவின் செனட் கிளையர் ரயில் நிலைய பகுதியில் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

ரயிலில் பயணித்த சிலர் குரோத உணர்வின் அடிப்படையில் தாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான வர்களில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலையும் மேற்கொண்ட இருவரும் பதின்ம வயதுடைய சிறுமிகள் என தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 16 வயது மதிக்கத்தக்க கருப்பு மற்றும் பிரவுன் தோலுடைய இரண்டு சிறுமிகள் இவ்வாறு சிலரைத் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருவரும் தங்களது உடலில் பச்சை குத்தி இருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் உடன் அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வோனில் நடந்த கொலை; தேடப்படும் பிக் அப் டிரக்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 13

கடந்த வார இறுதியில் வோனில் 57 வயதுடைய நபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, யோர்க் பிராந்திய பொலிஸார் சந்தேக நபரையும் கருப்பு நிற பிக்-அப் டிரக்கையும் தேடி வருகின்றனர்.

ஓகஸ்ட் 9 ஆம் திகதி பிற்பகல் 2:12 மணிக்கு, லாங்ஸ்டாஃப் சாலைக்கு வடக்கே உள்ள இஸ்லிங்டன் மற்றும் கிலோரன் அவென்யூஸ் அருகே உள்ள ஒரு குடியிருப்புக்கு அருகில் துப்பாக்கிச் சூடு பற்றிய சம்பவம் தொடர்பில் தமக்கு அழைப்பு வந்ததாக யோர்க் பிராந்திய பொலிஸார் கூறியுள்ளனர்.

அங்கு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவரை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

காயமடைந்த நபர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# காட்டுத் தீ, புயல் அனர்த்தங்களுக்கு மனித செயற்பாடுகளே காரணமாம்!

பிரிட்டிஷ் கொலம்பியா, ஓகஸ்ட்13

மனிதனால் ஏற்படும் காலநிலை மாற்றம் வெப்ப அலைகளை அதிக அளவில் உருவாக்குகிறது எனவும், காட்டுத்தீ மற்றும் புயல் போன்ற தீவிர நிகழ்வுகளை தூண்டுகிறது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இம்மாதம் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்து மனிடோபா வரை அதிக காட்டுத்தீ ஏற்படும் என்றும், பருவநிலை மாற்றத்தைத் தூண்டும் என்றும் இயற்கை வள அமைச்சர் ஜொனாதன் வில்கின்சன் தெரிவித்துள்ளார்.

'இந்த ஆண்டின் இந்த நேரத்தில் மேற்கு கனடாவில் அதிக அளவு தீ நடவடிக்கைகள் காணப்படுவது அசாதாரணமானது அல்ல' என நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்டம்பர் மாதத்தில் தீ நடவடிக்கை இயல்பை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் 474 தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஆண்டு இந்த நேரத்தில் சுமார் 900 தீ விபத்துகள் ஏற்பட்டிருந்தன.



# காட்டுத் தீயால் ஜெஸ்பர் தேசியப் பூங்காவிலிருந்து வெளியேறிய மக்கள் வெள்ளியன்று திரும்ப அனுமதி

அல்பேர்ட்டா, ஓகஸ்ட் 13

காட்டுத் தீயினால் ஜெஸ்பர் தேசியப் பூங்காவில் இருந்து வெளியேறிய மக்கள் மூன்று வாரங்களுக்குப் பிறகு வெள்ளிக்கிழமை நகரத்திற்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அதிகாரிகளால் இந்த திகதி அறிவிக்கப்பட்டது.

அதே நேரத்தில் வீட்டிற்கு திரும்புவது ஒரு கடினமான சோதனையின் தொடக்கமாக இருக்கும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

அனைத்து குடியிருப்பாளர்களும் வணிக உரிமையாளர்களும் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு பூங்காவிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்,

நெடுஞ்சாலை 16, தேசிய பூங்கா வழியாக கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் நெடுஞ்சாலை நாள் முழுவதும் திறக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# வெள்ளத்தில் மூழ்கிய செல்சியில் அவசரகாலம் 10 நாள்கள் நீடிப்பு

கியூபெக், ஓகஸ்ட் 13

கியூபெக்கின் செல்சி பகுதியில் அவசரகால உத்தரவு 10 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் மீட்புக் குழுவினர் தொடர்ந்தும் வீதிகள் மற்றும் வெள்ளத்தில் மூழ்கிய அடித்தளங்களில் பணிபுரிந்தனர்.

டெபி என்ற வெப்பமண்டல புயலில் இருந்து நகரம் அனுபவித்த கடுமையான மழைப்பொழிவைத் தொடர்ந்து செல்சி நகர சபையானது கடந்த சனிக்கிழமை அவசர நிலையை அறிவித்தது.

வழக்கமான சபை செயல்முறைக்கு செல்லாமல் கட்டுமான பணியாளர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம் சேதத்தை சரிசெய்ய நகர சபையை விரைவாக நகர்த்த இந்த அறிவிப்பு அனுமதிக்கிறது.

சேதத்தை முழுந்தவரை திறமையாக சமாளிப்பதற்கு அதிகாரிகளுக்கு உதவ இந்த முடிவு எடுக்கப்பட்டது என செல்சி நகர மேயர் தெரிவித்துள்ளார்.

அவசரகால உத்தரவு நேற்று காலை காலாவதியாக இருந்த நிலையில், மேலும் பத்து நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.



# காட்டுத் தீயினால் உளவியல் பாதிப்பு

காட்டு தீ காரணமாக கனடிய மக்கள் பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் மீட்பு பணியாளர்கள் போன்றவர்கள் காட்டுத்தீ அனர்த்தம் காரணமாக உடல்நிலை பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பாதிப்பானது நீண்ட நாளுக்கு நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காட்டுத்தீ ஏற்பட்டு முடிந்ததன் பின்னர் மக்கள் மன அழுத்தங்களை எதிர் நோக்குகின்றனர் எனவும் வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வேறு ஒரு பகுதியில் ஏற்பட்ட காட்டு தீ குறித்து சமூக ஊடகங்களில் வெளியாகும் பதிவுகளை பார்க்கும் போது கூட தாம் இவ்வாறு மன உளைச்சலை எதிர் நோக்க நேரிடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

கனடாவில் சுமார் 60 வீதத்திற்கும் மேற்பட்ட வயது வந்தவர்கள் காட்டுத்தீ அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்றனர் எனவும் நீண்ட காலத்திற்கு அவர்களுக்கு இந்தப் பாதிப்பு நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன உளைச்சல் தொடர்பான பாதிப்புகளுக்கும் பலரும் உள்ளாகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உரிய முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள தவறினால் அவ்வாறானவர்களுக்கு நீண்ட காலத்திற்கு இந்த உளவியல் பாதிப்புகள் நீடிக்கக் கூடும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கனடாவில் கடந்த ஆண்டு பாரிய அளவில் காட்டுத்தீ ஏற்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டிலும் பல்வேறு பகுதிகளில் ஏற்கனவே காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான ஒரு பின்னணியில் காட்டுத்தீ பதிப்புகளினால் மக்கள் உளவியல் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# காட்டுத் தீயினால் காற்றின் தரம் மனிற்றோபா பகுதியில் பாதிப்பு!

கனடாவின் மனிற்றோபா பகுதியில் காட்டுத்தீ காரணமாக காற்றின் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் பல இடங்களில் காட்டுத்தீ பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் நிறுவனம் இது தொடர்பான எச்சரிக்கை விடுத்துள்ளது.

சர்ச்ஹில், தொம்சன் மற்றும் பிலிம் ப்லோன் உள்ளிட்ட மானிடோபாவின் பல பகுதிகளில் இவ்வாறு காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காற்றின் தரம் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, புகை மூட்டமாக காணப்படுவதாகவும் வாகன சாரதிகளுக்கு அசௌகரியங்களைது ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான புகை மண்டலமாக காணப்படும் நிலைமை அனைவருக்கும் ஆபத்தானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சிரேஷ்ட பிரஜைகள், சிசுக்கள், சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார் மற்றும் திறந்த வெளியில் பணிகளில் ஈடுபடுவோர் போன்றவர்கள் அதிக அளவு பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியம் இல்லாத சந்தர்ப்பங்களில் திருந்தவெளியில் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.






# ஒன்றாரியோவில் மூன்று நாள்களில் 8 ஆயிரம் பேர் போக்குவரத்து விதிமீறல் குற்றச்சாட்டில் சிக்கினர்!

ஒன்றாரியோவில் கடந்த வார இறுதி நாள்களில் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பில் 8,000 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த இரண்டாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையிலான நீண்ட வார இறுதி நாள்களில் இவ்வாறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்துப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள், வேகமாக வாகனம் செலுத்தியவர்கள் உள்ளிட்ட பல்வேறு வகையினர் சிக்கியுள்ளனர். மேலும் இருக்கைப் பட்டிகளை அணியாத சாரதிகள் மற்றும் பயணிகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் அவசரமாக பயணம் செய்யும் வாகனங்களுக்கு சில சாரதிகள் பாதை இடத்தை ஒதுக்கி தர வில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வார இறுதி நாள்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் எட்டு பேர் உயிரிழந்து உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேகக்கட்டுப்பாட்டை மீறி அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்தியமை தொடர்பில் சுமார் 4,000 முறை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பான வழிமுறைகளை பயன்படுத்தி வாகனத்தை செலுத்தும் போது உயிர் சேதங்களை தவிர்க்க முடியும் என பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

# மோ. சைக்கிள் விபத்து மரணங்கள் ஒன்றாரியோவில் திடீர் அதிகரிப்பு!



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துகளினால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒன்றாரியோ மாகாண பொலிஸார் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.


இரு சில்லு சைக்கிள் விபத்து மரணங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் இதுவரையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 50 வீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 12 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் 5 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிக வேகம், கட்டுப்பாட்டை இழத்தல், வீதி போக்குவரத்து விதிகளை மீறுதல் போன்ற காரணங்களினால் இவ்வாறு விபத்துக்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. கவனயீனமாக வாகனம் செலுத்துவது அதிக அளவு விபத்துகளுக்கு ஏது வாகின்றது எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.




# கனடா அழகிப் போட்டியில் மலையாளப் பெண் வெற்றி

கனடாவில் நடைபெற்று முடிந்த அழகிப் போட்டியில் கேரளாவை சேர்ந்த பெண் ஒருவர் கலந்துக்கொண்டு பட்டத்தை வென்றுள்ளார்.

மிசஸ் கனடா எர்த் 2024 என்ற பட்டத்தை மலையாளி மிலி பாஸ்கர் பெற்றுள்ளார். இந்தப் போட்டியில் கனடிய அழகிகளை வீழ்த்தி கண்ணூர் தாளப்பைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றார்.

இந்தியர் ஒருவர் இந்த சாதனையை நிகழ்த்துவது இதுவே முதல் முறை. இந்தப் பெண் Electronics and Communication இன்ஜினியர்.

அவர் தனது கணவர் மகேஷ் குமார் மற்றும் குழந்தைகள் தமன்னா மற்றும் அர்மான் ஆகியோருடன் 2016 இல் கனடாவிற்கு சென்றார்.

மிசஸ் கனடா எர்த் போட்டியில் வென்ற பிறகு, அடுத்த ஆண்டு மிசஸ் குளோபல் எர்த் போட்டியில் கனடாவை பிரதிநிதித்துவப்படுத்துவார் எனவும் கூறப்படுகிறது.

குறித்த பெண் ஒரு யோகா பயிற்றுவிப்பாளராகவும் உள்ளார். முன்னதாக கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற கனடா மலையாளி பெண்களின் அழகிப் போட்டியிலும் இவர் முதலிடம் பெற்றிருந்தார்.

52 போட்டியாளர்கள் கலந்துக் கொண்ட இந்த போட்டியில் கலந்து கொண்ட கேரள பெண் முதலிடம் பெற்று பட்டத்தை வென்றுள்ளமையால் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கியூபெக்கில் காணாமல் போன முதியவர் பின்பு சடலமாக மீட்பு




கனடாவின் கியூபெக் மாகாணத்தில் காணாமல் போயிருந்த முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் காணாமல் போனார் என அறிவிக்கப் பட்டிருந்தது.

அவரின் சடலம் பெட்டிஸ்கேன் நதியின் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

டெபி புயல் காற்று காரணமாக இந்தப் பகுதியில் மழை வெள்ளம் மற்றும் பலத்த காற்று ஏற்பட்டு இருந்த நிலையில் இந்நபர் காணாமல் போயிருந்தார். மறுநாள் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

ஹெலிக்கொப்டர்கள் மூலமாகவும் வேறும் வழிகளிலும் இந்த நபரைத் தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியில் அபர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.